**மத்திய மாகாண சபை - 2013**

-----------------------------------------------------------

மத்திய மாகாண சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, மத்திய மாகாண சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 மாகாண சபை நிதியக் கணக்கு

மாகாண சபை நிதியத்தின் கணக்கு 2014 மார்ச் 13 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

### 2.2.2 ஏனைய கணக்குகள்

2014 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் முன்னேற்றம் கீழே காட்டப்படுகின்றன.

| | கணக்குகள் தொடர்பான விபரம் | 2013 ஆம் ஆண்டிற்குரிய கணக்குகள் | | |
|---|---|---|---|---|
| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
| i. | சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று | 01 | 01 | - |
| ii. | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 32 | 31 | 01 |
| iii. | வருமானக் கணக்குகள் | 02 | 02 | - |
| iv. | மாகாண சபை உத்தியோகத்தர் களுக்கான முற்பணக் கணக்குகள் | 66 | 65 | 01 |
| v. | வணிக முற்பணக் கணக்குகள் | 06 | 02 | 04 |
| vi. | நிதியக் கணக்குகள் | 01 | 01 | - |
| vii. | நியதிச்சட்டக் கணக்குகள் | 03 | 02 | 01 |
| viii. | மாகாண சபை உறுப்பினர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 01 | 01 | - |
| | | 112 | 105 | 07 |

### 2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 74,812,510 ஆன வட்டி வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும், முதலீடு செய்தல் தொடர்பாக அல்லது வட்டி வருமானம் கணக்கீடு செய்தல் தொடர்பாக பின்பற்றப்பட்ட முறைமை கணக்கீட்டு கொள்கைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண சபையின் ஆரம்பத்திலிருந்து மத்திய அரசினாலும் மாகாண சபையினாலும் நிலையான சொத்துக்களுக்காக கருத்திற் கொள்ளக்கூடிய செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 10,252,017 தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிலையான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன், கணக்கீட்டு கொள்கைகள் மூலம் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 சனவரி 24 ஆந் திகதிய எஸ்எஸ்/ஏஎஸ்/ஏஏ ஆம் இலக்க அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தக் கணக்குகள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மாகாண சபை அதற்கு இணங்கியிருக்கவில்லை.

### 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 469,473,632 தொகையான சொத்துக்கள் மீதிகளுடன் ரூபா 178,395,563 தொகையான பொறுப்பு மீதிகள் ஒன்றுக்கொன்று ஈடு செய்யப்பட்டு ரூபா 291,078,069 தொகையான தேறிய வேறுபாடு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது உழைக்கப்பட்டிருந்த முதலீட்டு வட்டி வருமானங்களில் ரூபா 13,365,139 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகத்தில் ரூபா 2,650,795 தொகையான நிலுவை மோட்டார் வாகன வருமான அனுமதிப்பத்திரக் கட்டணம் நிதிக்கூற்றுக்களில்

காணப்படும் நிலுவை வருமான மீதிகளுக்குள் உள்ளடக்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 43,240,437 தொகையான நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) நானாவித பொறுப்புக்களின் கீழ் ரூபா 2,463,666 ஆன மீதியில் கல்பாலம பண்ணை முற்பணக் கணக்கின் விதை கிழங்கு விற்பனையிலிருந்து கிடைத்த ரூபா 352,000 வருமானம் இரண்டு முறை பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன், அதனை தீர்வு செய்யாமல் பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) ஓய்வூதிய நிதியத்திற்காக மீளாய்வாண்டிற்குரிய அனுப்ப வேண்டிய ரூபா 398,952,677 தொகைக்கான கணக்குகளில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், முன்னைய 03 ஆண்டுகளுக்குரிய ரூபா 1,459,875,807 ஓய்வூதிய தொகைக்கான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) வருட ஆரம்பத்திலும் இறுதியிலும் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் மீதிகள் உள்ளடக்கப்படுகின்ற முறைகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்புக்கள் மூலம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 745,164,130 கூட்டுத்தொகையான 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய பயன்பாட்டுப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படும் மீதிகளுக்கிடையே அவதானிக்கப்பட்ட வித்தியாசம் ரூபா 464,579,254 ஆக இருந்தது.

### 2.2.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

i. 05 நிறுவனங்களினால் தீர்வுசெய்யப்படாத ரூபா 46,892,180 கூட்டுத்தொகையான அங்கீகரிக்கப்பட்ட முற்பண மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் பல வருடங்களாக முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்டன.

ii. வணிக முற்பணங்களுக்கான மூலதன பங்களிப்புக் கணக்கின் கீழ் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,677,540 தொகையை தீர்வுசெய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iii. புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் 6 ஆண்டுகளில் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆடைகள் விற்பனைகளிலிருந்து ரூபா 17,824,998 தொகை தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

iv. மாத்தளை வலயக் கல்வி அலுவலகத்திற்கு 2003 ஒக்தோபர் மாதத்திற்காக விடுவிக்கப்பட வேண்டிய ரூபா 200,000 ஆன கட்டு நிதிக்காக ரூபா 2,000,000 ஆன கட்டுநிதி விடுவிக்கப்பட்டமையால் காசு மற்றும் கட்டுநிதி மீதிகளுக்கு இடையே ரூபா 1,800,000 ஆன வேறுபாடொன்று இடம்பெற்றிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இக்கொடுக்கல் வாங்கல் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

v. மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,134,299,984 ஆக இருந்தது. நீண்டகாலமாக 5,567 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 140,422,261 ஆன கடன் மீதிகளும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

vi. மாகாணங்களுக்கிடையேயும் மத்திய அரசாங்கத்திலிருந்தும் மாகாண அரச நிறுவனங்களுக்கிடையே இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டிய தனிப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,666,659 ஆக இருந்தது.

5 மாகாண சபைகளிலிருந்து இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களுக்காக அம்மாகாணங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 588,312 தொகையான கடன் மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|
| (அ) அதிகாரச்சட்டங்கள் | |
| i. 2003 இன் 17 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1942 இன் 18 ஆம் இலக்க அரச சேவை சேமலாப நிதிய கட்டளைச் சட்டம் | மாகாண விவசாயத் திணைக்களத்தின் 03 பண்ணைகளினதும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினதும் ஓய்வூதிய சம்பளம் உரித்தற்ற 53 தொழிலாளர்களுக்காக அனுப்ப வேண்டிய ரூபா 356,430 ஆன பங்களிப்புத் தொகையும் நிதியத்திற்கு அனுப்பியிருக்கவில்லை. |
| ii. 2011 இன் 22 ஆம் இலக்கம் மற்றும் 2013 இன் 18 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்கள் மூலம் திருத்தப்பட்ட 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 120 மற்றும் 132(i) ஆம் பிரிவு | கண்டி மற்றும் நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்கள் 02 மற்றும் வைத்தியசாலைகளில் சேவை புரியும் 50 மருத்துவர்களிடமிருந்தும் 190 தாதியர் களிடமிருந்தும் முறையே ரூபா 250,680 தொகை மற்றும் ரூபா 743,847 தொகையான உழைக்கும் போது செலுத்தும் வரித் தொகை அறவிட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பியிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரம் | நுவரெலியா கல்வி வலயத்தின் நான்கு ஆசிரியர்கள் கடற்படை மாணவர் சேவைக்கும் பாராளுமன்ற உறுப்பினரொருவரின் தனிப்பட்ட பதவியணியின் சேவைக்காகவும் முறையே 1991, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் விடுவிக்கப்பட்டிருந்தனர். |

| | |
|---|---|
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணத்தின் 71 ஆவது பிரமாணம் | பதவியணியினர் திட்டத்தில் அங்கீகரிக்கப்படாத விடயப் பணிப்பாளர் போன்ற பதவிகளுக்காக 13 நியமனங்கள் வழங்கப்பட்டு 2013 ஆம் ஆண்டின் போது அவர்களுக்கு ரூபா 6,673,417 தொகை சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) மாகாண நிதி விதிகள் | |
| i. நிதி விதி 30.1 | நிதிஏற்பாடு வரையரைக்கு மிகையாக செலவிட முடியாத போதிலும், நிதிஏற்பாடு வரையரைக்கு மிகையாக 22 செலவின விடயங்களின் கீழ் செலவிடப்பட்டிருந்த ரூபா 71,240,580 ஆன செலவினங்களுக்காக மத்திய மாகாண சபையின் நிதி முகாமைத்துவத்தினால் பின்னர் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. |
| ii. நிதி விதி 54(6) | 2003 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக 36 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கைகள் மூலம் மத்திய மாகாண கல்வித் திணைக்களத்துடன் தொடர்புடைய 25 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 1,151,803 தொகையான மிகை அறவீடு 2014 யூலை மாதம் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| iii. 54.1.1, 54.1.3, 54.1.5, 54.3.1, 54.4, 54.5 மற்றும் 54.6 ஆம் இலக்க நிதி விதிகள் | மத்திய மாகாண சபையின் தலைவரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த கேஜீ – 1326 ஆம் இலக்க வண்டி 2013 செப்தெம்பர் 18 ஆந் திகதி பதியபலல்லவில் விபத்திற்குட்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக பரிசோதனை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| iv. நிதி விதி 138.1 | கொத்மலே வலயக் கல்வி அலுவலகத்ததினால் 02 உத்தியோகத்தர்கள் கையொப்பமிடாத 14 தேவைப்பட்டியல்களுக்காக ரூபா 1,566,897 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| v. நிதி விதி 177 | செலவினங்களை சான்றுறுதிப்படுத்தாமல் நாவலப்பிட்டிய வைத்தியசாலையில் ரூபா 2,026,491 பெறுமதியான கொடுப்பனவு 05 உறுதிச் சீட்டுக்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |

vi. நிதி விதி 282.2

வங்கிக் கணக்கிணக்க கூற்றொன்றில் இனங்காணப்படாத உருப்படியொன்று இருக்க கூடாத போதிலும், புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் சனவரி முதல் திசெம்பர் வரையான ஒவ்வொரு வங்கிக் கணக்கிணக்க கூற்றிலும் ரூபா 1 மில்லியன் முதல் ரூபா 2.2 மில்லியன் வரையான இணக்கமின்மைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

vii. நிதி விதி 482.2.1.

இருப்பு மட்டங்களை போதியளவில் பேணுவதற்காக முறையாக இருப்புக்களை கட்டளையிடல் மேற்கொள்ள வேண்டிய போதிலும், பிரதான அமைச்சினால் அதற்கு இணங்காத வகையில் இருப்பு சேகரித்தமை காரணமாக 24 உருப்படிகளுக்குரிய 4,243 பொருள் அலகுகள் அழிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

(உ) கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகள்
------------------------------------------------

i. 2006 சனவரி 12 ஆந் திகதிய 2006/02 ஆம் இலக்க சுற்றறிக்கை

1 ம் தரத்திலிருந்து 5 ஆந் தரம் வரை வகுப்பொன்றில் இருக்க வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை 40 இற்கும் 6 தரத்திலிருந்து 11 ஆந் தரம் வரை வகுப்பொன்றில் இருக்க வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை 45 இற்கும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கையில் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தில் 2 தரத்திலிருந்து 5 ஆந் தரம் வரையான வகுப்புகளில் 169 மாணவர்களும் 6 தரத்திலிருந்து 11 ஆந் தரம் வரையான வகுப்புகளில் 68 மாணவர்கள் மிகையாகவும் இருந்தனர்.

ii. 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்க சுற்றறிக்கை

ஆசிரியர் இடமாற்றக் கொள்கை தயாரிக்கும் போது வசதியான பாடசாலையொன்றில் ஆகக்கூடிய சேவைக்காலம் 8 வருடங்களும் மிகவும் வசதியான பாடசாலைகளில் ஆகக்கூடிய சேவைக்காலம் 6 வருடங்களுமாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 11 ஆண்டுகள் முதல் 34 ஆண்டுகள் வரையான சேவைக்காலமொன்று ஒரே பாடசாலையில் சேவையில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்கள் இருந்தமை

| | | |
|---|---|---|
| | | தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டது. |
| (ஊ) | 2006 ஒக்தோபர் 30 ஆந் திகதிய 14/2006 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி | கண்டி சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் 2012 ஆகஸ்ட் முதல் 2013 நவம்பர் வரை அரசாங்க சேவைகள் சேமலாப நிதியத்திற்கு அறவிடப்பட்டிருந்த ரூபா 4,094,481 ஆன பங்களிப்புத் தொகை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்க வில்லை. |
| (எ) | கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் பிரிவு | 2013 ஆம் ஆண்டின் போது மாத்தளை சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் 37 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,125,691 தொகையான பெறுமதி சேர் வரி தொடர்பான விபரங்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்ட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 1991 மார்ச் 26 ஆந் திகதிய 3/91 ஆம் இலக்க மத்திய மாகாண சபை பிரதம செயலாளரின் சுற்றறிக்கை | 17 பாட பணிப்பாளர்களால் முன்னைய 87 மாதங்களுக்குரித்தான மாதாந்த முற்பண நிகழ்ச்சித்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | மனித வள அபிவிருத்தி கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு செயலாளரின் 2002 திசெம்பர் 04 ஆந் திகதிய எச்ஆர்டீ/பிபிஎம்/2002/30 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 21.1 மற்றும் 24.1 ஆம் பந்திகள் | மாத்தளை வலயத்திற்குரிய 120 பாடசாலைகளில் ரூபா 2,548,662 தொகையும் நாவுல வலயத்திற்குரிய 39 பாடசாலைகளில் ரூபா 1,631,656 தொகையான குணநல உள்ளீட்டுத் தொகை 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் செலவு செய்யப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. |
| (ஒ) | 2012 பெப்ரவரி 16 ஆம் திகதிய 156 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமல் 2014 ஆம் ஆண்டிற்காக 700 தினப்பதிவேடுகள், அழைப்பிதழ்கள் என்பவற்றை அச்சிடுவதற்காக ரூபா 678,000 தொகை செலவிடப்பட்டிருந்தன. |
| (ஓ) | 2012 சனவரி 08 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சமூக அடிப்படையிலான சங்கங்களின் இயலுமை, அனுபவம் மற்றும் நிதி பலம் தொடர்பாக கருத்திற்கொள்ளாமல் கைத்தொழில் அமைச்சினால் ரூபா 7,416,567 கூட்டுத்தொகையான 14 |

| | |
|---|---|
| | நிர்மாணங்களுக்குரிய ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஔ) 2013 சனவரி 07 ஆந் திகதிய 02-07/2013 ஆம் இலக்க சுகாதார அமைச்சு செயலாளரின் பொதுச் சுற்றறிக்கை | கண்டி, மாவட்ட சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சேவை புரியும் 10 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் சனவரி முதல் செப்தெம்பர் வரையான 09 மாத காலப்பகுதிக்காக ஓய்வுநேரம், கடமை தடை, போக்குவரத்து மற்றும் வருகைக்கான மாதந்த படிகளுக்காக ரூபா 1,720,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

### 2.2.8 போதியளவிலான அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 செப்தம்பர் 15 ஆந் திகதிய பீஈடீ/58(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் மாகாண நிதி விதி 562 இன் பிரகாரம் மாகாண ஆளுநரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு தொடர்புடைய சுற்றறிக்கையை மாகாண சபைக்கு உரித்தாக்காமல் பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபையின் தலைவருக்கு மாதமொன்றுக்கு ரூபா 50,000 வீதம் 08 மாதங்களுக்கு ரூபா 400,000 தொகையான தலைவர் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(iv) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 1.1 ஆம் பந்தியின் பிரகாரம் கண்டி சுகாதார சேவைகள் மாவட்ட பணிப்பாளருக்கு இணைக்கப்பட்டிருந்த பீஈ 1938 ஆம் இலக்க வாகனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்கு மிகையாக ரூபா 50,016 ஆன 325 லீற்றர் பெற்றோல் வழங்கப்பட்டிருந்தன.

(இ) 2003 திெம்பர் 02 ஆந் திகதிய 04/03 ஆம் இலக்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் vi ஆம் பந்தியின் பிரகாரம் கல்வி அமைச்சின் செயலாளர், உதவிச் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பார், மேலதிக கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகிய உத்தியோகத்தர்களால் 11 வலயக் கல்வி அலுவலகங்களில் 116 உதவி கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்காக நியமனம் வழங்கப்பட்டிருந்தன.

## 3. வருமான முகாமைத்துவம்

---

**வருமானத் தலைப்பு இலக்கம் சீ 10 மற்றும் சீ 20 – பிரதம செயலாளர்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளில் மதிப்பிடப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட வரி வருமானங்களைக் கருத்திற்கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டு தவிர ஏனைய ஒவ்வொரு ஆண்டிலும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 363 மில்லியனிலிருந்து ரூபா 950 மில்லியன் வரையான வீச்சில் வருமானக் குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வரி மற்றும் வரியல்லாத வருமானங்களில் 6.48 சதவீத குறைவும் வருமானப் பற்றாக்குறை 17.68 சதவீதமான அதிகரிப்பும் மொத்த பாதீட்டு பற்றாக்குறையின் 14.99 சதவீத அதிகரிப்பும் இடம்பெற்றிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

i. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வரி மற்றும் வரியல்லாத வருமானங்களில் ரூபா 314,739,584 தொகையான குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

ii. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வருமானப் பற்றாக்குறையில் ரூபா 2,324,862,316 தொகையான அதிகரிப்பொன்று காணப்பட்டது.

(இ) 2011 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 2,531,311,627 தொகையான மாகாண சபை நிதியத்தின் திரட்டிய மீதி 2012 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,743,569,275 வரை ரூபா 787,742,352 ஆலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அப்பெறுமதி ரூபா 1,514,217,234 வரை ரூபா 229,352,041 ஆலும் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) இறுதிக் கணக்கின் பிரகாரம் மோட்டார் வாகன அனுமதிப்பத்திர வருமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 86,916,067 ஆக இருந்த போதிலும், 36 பிரதேச செயலகங்களிலிருந்து வெளியே மாறியிருந்த வாகனங்கள் தொடர்பான தகவல்களும் அம்மீதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) மத்திய மாகாண இறைவரி திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டின் போது முத்திரை வரி வருமானமாக நிதி முகாமைத்துவப் பிரிவிற்கு அனுப்பியிருந்த

ரூபா 862,749,670 தொகையில் ரூபா 173,311,390 தொகை குறித்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் வைத்திருக்கப்பட்டது.

## 4. நிதி மீளாய்வு

-----------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாகாண சபை நிதியத்தின் நடவடிக்கைகளில் ரூபா 18,751,665,970 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை 16,306,626,289 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,445,039,681 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

## 4.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

----------------------------------------------------------

மத்திய மாகாண சபையின் நிதி நிலைமை நிதிச் செயலாற்றல் தொடர்பான முக்கியமான விகிதங்கள் சில பின்வருமாறு.

(அ) மொத்த வருமானத்திற்கு மிகை / (பற்றாக்குறை)

--------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 02 ஆண்டு காலப்பகுதியிலும் 322 சதவீதத்திலிருந்து 413 சதவீதம் வரையான வீச்சில் வருமானப் பற்றாக்குறையில் தொடர்ச்சியான அதிகரப்பொன்று இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மொத்த வருமானம் மற்றும் மொத்த செலவினத்திற்கிடையே விகிதம்

----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

i. 2011 ஆம் ஆண்டில் ரூபா 19,540,855,678 தொகையான மொத்த செலவினம் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 23,292,216,013 வரை அதிகரித்திருந்ததுடன், அது 422 சதவீதத்திலிருந்து 513 சதவீதம் வரையான கூடிய பெறுமதியொன்றைக் எடுத்திருந்தது.

ii. 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013 ஆம் ஆண்டின் போது மொத்த வருமானத்தின் குறைவு ரூபா 314,739,584 ஆக இருந்ததுடன், 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக அக்குறைவு ரூபா 85,888,069 ஆக இருந்தது.

iii. மொத்த வருமானத்திற்கு ஒப்பாக மொத்த செலவினம் வருமான அதிகரிப்பினை விட செலவினத்தில் கருத்திற்கொள்ளக் கூடியளவில் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.3 பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானமும் செலவினமும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

i. மதிப்பிடப்பட்ட வரி வருமான இலக்கு ரூபா 950.3 மில்லியனால் அல்லது 19.8 சதவீதத்தினால் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

ii. 4 வருமான தலைப்புக்களில் மதிப்பிடப்பட்ட எல்லையை விட உள்ளவாறான செலவினம் ரூபா 934.2 மில்லியனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

iii. எதிர்பார்த்த அரசின் மூலதன மானியங்கள் ரூபா 1.208 மில்லியனால் அல்லது 26.9 சதவீதத்தினால் பூர்த்தி செய்தற்கு முடியாதிருந்தது.

iv. மீளாய்வாண்டிற்காக எதிர்பாரத்த வருமானப் பற்றாக்குறை ரூபா 213.8 ஆல் குறைவடைந்திருந்தது.

நிதிப் பிரமாணம் 50(ii) மற்றும் மாகாண விதி 7.2.1 இல் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் மதிப்பீட்டினை தயாரிக்காமையால் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினத்திற்கிடையே மேற்குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் கருத்திற் கொள்ளக்கூடியளவு விலகல் இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

# 5 அதிகாரசபைக் கணக்குகள் / நிதியக் கணக்குகள் மற்றும் வர்த்தக முற்பணக் கணக்குகள்

## 5.1 அதிகாரசபைக் கணக்குகள் / நிதியக் கணக்குகள்

**மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதிகாரசபை மற்றும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

**பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

i. மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதிகாரசபையில் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட

சொத்துக்கள் காணப்பட்ட போதிலும், அவற்றை மீள்மதிப்பீடு செய்து கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. ரூபா 3,964,490 தொகையான வாகன குத்தகைக் கொடுப்பனவுப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

iii. மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியமையால் உழைத்த வருமானம் ரூபா 3,600,132 ஆல் குறைத்தும் வாகனத் திருத்தங்களினால் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 3,541,387 ஆல் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

iv. மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் குறித்தொதுக்க மானியங்களில் கிடைக்கப்பெற்ற ரூபா 530,632,193 தொகையும் அதில் வீதி பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைளுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 505,728,896 ஆன செலவினம் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

---

பின்வரும் இணங்காமை சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன

i. தாபன விதிக்கோவை II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 31.16 ஆம் பந்திக்கு முரணாக இலஞ்சம் பெற்றுக்கொண்டமை தொடர்பான குற்றச்சாட்டின் அடிப்படையில் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதிகாரசபையின் தலைவர் முறையற்ற விதத்தில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு ரூபா 1,141,090 தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது.

ii. 2000 இன் 01 ஆம் இலக்க மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபை நியதிச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் 28 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு அவர்களுக்கு ரூபா 2,602,201 தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தன.

iii. வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் 02 ஆண்டு காலத்திற்கு மேலாக கடந்திருந்த ரூபா 155,592,930 கூட்டுத்தொகையான பொது வைப்பு கணக்கு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட சட்டரீதியான சம்பவங்கள்**

---

02 வெளிநபர்களால் அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்கும் இரத்துச் செய்தமைக்கும் எதிராக ரூபா 65,000,000 தொகை இழப்பீடு கோரி அதிகாரசபைக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**(ஈ) இனங்காணப்பட்ட நட்டங்கள்**

---

தெல்தோட்டை மற்றும் நாவுல கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்காக 2012 செப்தம்பர் மாதத்திலிருந்து 03 சந்தர்ப்பங்களில் ரூபா 49,392 தொகை செலவில் விலைகோரல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், தகைமையுடைய கேள்விதாரொருவரை தெரிவுசெய்வதற்குத் தவறியமையால் 2012 திசெம்பர் மாதம் முதல் 2014 சனவரி மாதம் வரை அதிகாரசபைக்கு ரூபா 1,008,000 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

**(உ) கணக்களிதன்மையும் நல்லாளுகையும்**

---

i. பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபையால் மீளாய்வாண்டிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று, செயல்நடவடிக்கைத் திட்டமொன்று மற்றும் கொள்வனவுத் திட்டமொன்று என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்றும் கொள்வனவுத் திட்டமொன்றும் தயாரிக்காதிருந்த போதிலும், 34 சந்தர்ப்பங்களின் போது மட்டுப்படுத்தப்பட்ட விலைகோரலின் கீழ் ரூபா 52,787,935 செலவில் வீதிகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

**(ஊ) பெறவேண்டிய கணக்குகள்**

மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் 4 வெளிச் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 10,322,448 கூட்டுத்தொகையினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 வர்த்தக முற்பணங்கள் கணக்கு

### 5.2.1 புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் வர்த்தக முற்பணங்கள் கணக்கு

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் வர்த்தக முற்பணக் கணக்கிற்குரிய 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்படவில்லை

### 5.2.2 ஹட்டன் வள நிலையத்தின் வர்த்தக முற்பணங்கள் கணக்கு

**(அ) பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

i. **அதிகாரமளிக்கப்பட்ட எல்லைகளுடன் இணங்காமை**

மீளாய்வாண்டின் ஒதுக்கீட்டு நியதிச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப் பட்டிருந்த பெறுவனவுகளின் ஆகக்குறைந்த எல்லை ரூபா 1,760,000 ஆக இருந்த போதிலும், அடையப்பட்டிருந்த எல்லை ரூபா 1,580,775 ஆக மாத்திரம் இருந்தமையால் மதிப்பீட்டு எல்லையை விட ரூபா 179,245 குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

ii. 2012 ஆம் ஆண்டில் தேறிய மிகை மொத்த வருமானத்தில் 43.73 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் அது 2.81 சதவீதமான பெறுமதியைக் கொண்டிருந்தது.

iii. முன்னைய ஆண்டின் மொத்தச் செலவினம் மொத்த வருமானத்தில் 56 சதவீதமாக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் அப்பெறுமதி 102.8 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

### 5.2.3 மாபனாவதுர வள நிலையத்தின் வர்த்தக முற்பணங்கள் கணக்கு

#### (அ) பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

i. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 1,754,824 அல்லது 187 சதவீதத்தினால் குறைவொன்று தென்பட்டது.

ii. முன்னைய ஆண்டில் 73 சதவீதமான அதகரிப்பொன்றை காண்பித்திருந்த செயற்பாட்டு வருமானத்திற்கு தேறிய மிகை மீளாய்வாண்டின் போது 2,513 சதவீத வீழ்ச்சியொன்றாக மாறியிருந்தது.

iii. மீளாய்வாண்டில் பாடநெறிகளை நடாத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட ரூபா 4,139 மில்லியன் தொகையில் ரூபா 0.67 மில்லியன் அல்லது 16 சதவீதம் மாத்திரம் கிடைத்திருந்தது.

iv. முன்னைய 02 ஆண்டுகளின் போதும் மீளாய்வாண்டின் போதும் 14 பாடநெறிகளுக்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்த பயிலுனர்களில் முறையே 42 சதவீதம், 46 சதவீதம் மற்றும் 53 சதவீதம் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர்.

### 5.2.4 கல்பாலம் பண்ணை வர்த்தக முற்பணக் கணக்கு

#### (அ) பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

i. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 9,369,914 ஆக இருந்த போதிலும், ஐந்தொகையில் அப்பெறுமதி ரூபா 1,279,183 ஆன எதிர் மறை மீதியொன்றாக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ரூபா 10,649,097 ஆன வேறுபாடொன்று கண்டறியப்பட்டது.

ii. மாகாண நிதி விதி 307.1 இன் பிரகாரம் மாகாண திறைசேரி கணனி அச்சீட்டு குறிப்புடன் திணைக்கள கணக்குகள் மாதாந்தம் இணங்காமையால் அம்மீதிகளுக்கிடையே ரூபா 843,750 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

iii. முன்னைய ஆண்டில் 79 சதவீதமான தேறிய இலாப விகிதம் மீளாய்வாண்டின் போது 33 சதவீதம் வரை குறைந்த பெறுமானத்தைக் கொண்டிருந்தது.

**5.2.5 மத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வியாபார மேம்பாட்டு திணைக்களத்தின் 582202 ஆம் விடய இலக்க உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பான முற்பணக் கணக்கு**

---

**(அ) பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

---

i. **இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

---

நிதி நிலைமை தொடர்பான கூற்றின் பிரகாரம் ரூபா 284,459,055 ஆன மீதியொன்று மத்திய மாகாண சபை நிதியத்தின் பெயரில் உரிமை மற்றும் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட போதிலும், மத்திய மாகாண சபையின் நிதி நிலைமைக் கூற்றில் அம்மீதி ரூபா 35,856,384 ஆக காண்பிக்கப்பட்டமையால் மீதிகளுக்கிடையே ரூபா 248,602,671 ஆன வேறுபாடொன்று இருந்தது.

ii. **மதிப்பீட்டு எல்லைகளைப் பின்பற்றாமை**

---

முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்காக எல்லைகளை மிகைத்தல் குறைவதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு திணைக்களத்திற்கு கண்டிப்பாக கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், முன்னைய ஆண்டுகள் உட்பட மீளாய்வாண்டிலும் அதற்கு இணங்காமல் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆகக் குறைந்த செலவு எல்லை ரூபா 9,000,000,000 முதல் ரூபா 6,500,000 வரை குறைத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

iii. **பயிலுனர்கள் பாடநெறியை விட்டுச் செல்லல்**

---

மீளாய்வாண்டில் ஆட்சேர்க்கப்பட்ட 365 பயிலுனர்களில் 128 பேர் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்ததுடன், முன்னைய ஆண்டுகளின் அந்த எண்ணிக்கை 100 ஆக இருந்தன. எவ்வாறாயினும் பாடநெறிகளை விட்டுச் செல்லும் எண்ணிக்கையை குறைப்பதற்காக வேலைத்திட்டமொன்று தயாரித்து செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 செயலாற்றல்

(அ) மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயணிகள் போக்குவரத்திற்காக ரூபா 21 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 7.95 மில்லியன் தொகையான செயற்திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தன. ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து ரூபா 13.05 மில்லியன் தொகை அதாவது 62.14 சதவீதமான அளவு விளைவற்றிருந்தது.

(ஆ) வீதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் நிதிஏற்பாடுகளை மேற்கொள்ளும் போது 1,269 கிலோமீற்றர் தூரம் வீதி, இடைவெளி காணப்படும் கண்டி மாவட்டத்திற்கு அக் கிலோமீற்றர் அளவை விட ஒப்பீட்டுரீதியில் 9.4 சதவீதம் குறை ஒதுக்கீடும் 480 கிலோமீற்றர் காணப்படும் மாத்தளை மாவட்டத்திற்கு 27.2 சதவீதமான கூடியநிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) ஜேஐசீஏ செயற்திட்டத்தின் கீழ் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் கீழ் 15 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக ரூபா 1,247 மில்லியன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் எதுவித செயற்திட்டமொன்றும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஈஎன்டீஆர்பீ செயற்திட்டத்தின் கீழ் சகல நிர்மாண வேலைகளையும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் மீளாய்வாண்டின் இறுதிவரையில் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 730 மில்லியன் ஆன நிதிஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 15 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையில் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மாற்று எரிபொருள் நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 2 மில்லியன் செலவு செய்து பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த குண்டசாலை உயிரியல் வாயு அலகு ஆண்டின் இறுதிவரையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) போக்குவரத்து திணைக்களத்தின் நடவடிக்கைகளை செயற்திறனாக நிறைவேற்றுவதற்காக திணைக்கள போக்குவரத்து நியதிச்சட்டம் 2013 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2013 ஆம் ஆண்டின் போது ஆட்சேர்ப்பு/ பதவிஉயர்வு நிரந்தரமாக்குதல் மற்றும் வினைத்திறன் தடைகாண் பரீட்சை உட்பட 11 பரீட்சைகளை நடாத்துவதற்காக விண்ணப்பங்களை கோருதல் / பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் என்பன திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் மத்திய மருந்தகங்களின் 2013 ஆம் ஆண்டிற்குரிய மருந்து தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டு உற்பத்தி செய்வதற்கு மதிப்பிடப்பட்டிருந்த 45 வகையான மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பாடசாலை பரீட்சை பெறுபேறுகள்

-----------------------------------------------------

மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் மாணவர்களின் கல்வி பெறுபேறுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 5 ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை

---------------------------------------------------

* மத்திய மாகாணத்தின் 15 வலயக் கல்வி அலுவலகங்களுக்குரிய 1516 பாடசாலைகளில் 2013 ஆம் ஆண்டில் 5 ஆம் புலமைப்பரிசில் பரீட்சைக்காக 43192 மாணவர்கள் தோற்றியிருந்தனர். அதில் 2947 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளை மிகைத்து புள்ளிகளைப் பெற்றுக்கொண்டிருந்ததுடன், அது பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் 7 சதவீதத்தை விட குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

* ஒரு வினாப்பத்திரத்திற்கு 35 புள்ளிகள் வீதம் 02 வினாப்பத்திரங்களுக்கு 70 புள்ளிகள் பெற்றுக்கொண்டு பரீட்சையில் சித்தியடைந்திருந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 27,973 ஆக இருந்தது.

* நாட்டின் மொத்த பெறுபேறுகளில் மத்திய மாகாணத்திற்கு 7 ஆவது இடம் கிடைத்திருந்ததுடன், வெட்டுப்புள்ளிகளின் பிரகாரம்

சித்தியடைதல் எண்ணிக்கை கருதும் போது மத்திய மாகாணத்திற்கு நாட்டின் இறுதி இடம் கிடைத்திருந்தது.

* மாவட்ட மட்டத்தில் மொத்தப் பெறுபேறுகளைக் கருத்திற் கொள்ளும் போது கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்கள் முறையே 22, 24 மற்றும் 25 ஆவது இடங்களை உரித்தாக்கி கொண்டிருந்தன.

ii. க.பொ.த (சா.த) பரீட்சை

---------------------------------------

* 2013 ஆம் ஆண்டில் க.பொ.த (சா.த) பரீட்சைக்காக மத்திய மாகாணத்தின் 919 பாடசாலைகளில் 34,455 மாணவர்கள் தோற்றியிருந்ததுடன், அதில் க.பொ.த (உ.த) தொடர்வதற்காக 21,878 பேர் தகைமை பெற்றிருந்தனர். அந்த எண்ணிக்கை பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் 63.5 சதவீதமாக இருந்தது. நாட்டின் மொத்த பெறுபேறுகளில் மத்திய மாகாணத்திற்கு 7 ஆவது இடம் கிடைத்திருந்தது.

* க.பொ.த (சா.த) பரீட்சைக்காக தோற்றிய மாணவர்களில் 712 சகல பாடங்களுக்கும் ‘ஏ’ சித்தி பெற்றுக்கொண்டிருந்த போதிலும், அந்தளவு பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் 2 சதவீதத்தை எடுத்திருந்தது.

* பரீட்சைக்காக தோற்றிய மாணவர்களில் 1,361 பேர் சகல பாடங்களிலும் சித்தியடையாமல் இருந்ததுடன். அப்பெறுமதி 3.95 சதவீதமாக இருந்தது.

* க.பொ.த (சா.த) பரீட்சைக்காக தோற்றிய மாணவர்களின் ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் போன்ற கட்டாய பாடங்கள் சித்தியடையாமை கூடிய பெறுமானத்தைக் கொண்டிருந்தன.

| பாடம் | தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடையாத சதவீதம் |
|---|---|---|---|
| ஆங்கிலம் | 34,380 | 18,527 | 53.88 |
| கணிதம் | 34,373 | 16,431 | 47.80 |
| விஞ்ஞானம் | 34,390 | 12,912 | 37.54 |

iii. க.பொ.த (உ.த) பரீட்சை

--------------------------------------

* 2013 ஆம் ஆண்டில் க.பொ.த (உ.த) பரீட்சைக்காக மத்திய மாகாணத்தின் 428 பாடசாலைகளில் 26,697 மாணவர்கள் தோற்றியிருந்ததுடன், அவர்களில் 15,148 பேர் 03 பாடங்களிலும் சித்தியடைந்திருந்தனர். அப்பெறுமதி பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் 56.74 சதவீதமாக இருந்தது. 09 மாகாணங்களினதும் மொத்த பெறுபேறுகளை ஒப்பிடும் போது மத்திய மாகாணத்திற்கு 07 ஆவது இடம் கிடைத்திருந்தது.
* 424 மாணவர்கள் 03 பாடங்களிலும் ‘ஏ’ சித்தி பெற்றுக்கொண்டிருந்த போதிலும், அப்பெறுமதி பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் 1.59 சதவீதத்தை எடுத்திருந்தது.

* 3,053 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்தியடையாமல் இருந்ததுடன். அப்பெறுமதி பரீட்சைக்குத் தோற்றிய எண்ணிக்கையின் 11.44 சதவீதமாக இருந்தது.

* 2013 ஆம் ஆண்டில் க.பொ.த (உ.த) பரீட்சைக்காக தோற்றிய மாணவர்களில் 15,148 வெவ்வேறு பாடப்பரப்புகளில் பல்கலைக்கழக பிரவேசத்திற்காக தகைமைகளைப் பெற்றுக்கொண்டிருந்தனர். அது தொடர்பான பொழிப்பாக்கப்பட்ட விபரமொன்று பின்வருமாறு இருந்தன.

| பாடவிதானம் | தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | பல்கலைக்கழக பிரவேசத்திற்காக தகைமைகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடையாத எண்ணிக்கை |
|---|---|---|---|
| உயிரியல் விஞ்ஞானம் | 4,117 | 1,879 | 2238 |
| பௌதீக விஞ்ஞானம் | 2,891 | 1,330 | 1,561 |
| வர்த்தகம் | 7,401 | 4,013 | 3,388 |
| கலை | 12,112 | 7,822 | 4,290 |
| ஏனையவை | 179 | 104 | 72 |
| மொத்தம் | 26,697 | 15,148 | 11,549 |

- பல்கலைக்கழக பிரவேசத்திற்காக தகைமைகளைப் பெற்றுக் கொண்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை கருத்திற் கொள்ளும் போது உயிரியல் விஞ்ஞானம் மற்றும் பௌதீக விஞ்ஞானத் துறையின் பெறுபேறுகள் 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை கண்டறியப்பட்டது.

## 6.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கடன் நிதியமொன்றை ஆரம்பிப்பதற்காக வீடமைப்புத் திணைக்களத்தினால் 2009 ஆம் ஆண்டின் போது பிரதேச அபிவிருத்தி வங்கியில் வைப்புச் செய்த 11,250,000 தொகையில் அன்றிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை குறித்த செயற்பாட்டிற்கு பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டமையால் ரூபா 3,150,000 வட்டி வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 மார்ச் 20 ஆந் திகதி வீடமைப்பு ஆணையாளரினால் பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட புதிய உடன்படிக்கையின் பிரகாரம் அத்திகதியில் இருந்து 06 மாதங்களுக்குள் 300 நலனாளிகளுக்கு கடன் வழங்குவதற்கு வங்கி இனங்கப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 90 நலனாளிகளுக்கு மாத்திரம் ரூபா 4,480,000 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்தது.

(இ) வீடமைப்புத் திணைக்களத்தின் மூலம் நேரடியாக கடன் வழங்கல் மற்றும் நிலுவை மீதிகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு

| கடன் முறைமை | கடன் அறவிடப்பட வேண்டிய நபர்களின் எண்ணிக்கை | அறவிடப்படாமல் காணப்படும் ஆண்டுகள் | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|
| வீடமைப்புகடன் | - | 17 | 3,198,741 |
| கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள் | 179 | 20 | 952,643 |
| பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் | 347 | 21 | 1,979,849 |

(ஈ) பிரதான அமைச்சு, கமநல அமைச்சு மற்றும் 3 திணைக்களங்களுக்குரிய ஆதனங்களுக்கு 15 சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருந்த ரூபா 31,834,853 தொகையான இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமல் வருடக் கணக்காக முன்கொண்டு வரப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு அந் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 மார்ச் முதல் ஒக்தோபர் வரையான 8 மாத காலப்பகுதியில் ஊழியர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட ரூபா 379,639 கூட்டுத்தொகையான முத்திரைக் கட்டணம், அக்ரஹார பங்களிப்புத் தொகை மற்றும் நலன்புரிச் சங்கங்களுக்காக அறவிடப்பட்ட தொகை உரிய நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்படாமல் சுகாதாரத் திணைக்களத்தின் நிதித் தேவைக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஊ) மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகம் என்பன மாத்தளை பிரதேச செயலகத்திற்குரிய காணியில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 நவம்பர் மாதம் வரையிலும் இக் காணியை சுகாதாரத் திணைக்களத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) தம்புள்ள வீர டென்சில் கொப்பகடுவ ஆதார வைத்தியசாலை வளவில் மேற்கொள்ளப்பட்டிருந்த இரண்டு அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பாக இலங்கை பொலிஸினால் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு சுகாதார அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 02 மாதங்கள் முதல் 19 மாதங்கள் வரையான காலப்பகுதியில் 34 வகையான மருந்து வகைகள் பற்றாக்குறையாக இருந்தமையால் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கு நாள்தோறும் வருகை தரும் நோயாளிகளுக்கு நம்பிகையான திருப்திகரமான ஆயுள்வேத சேவையொன்றை வழங்க முடியாதிருந்தது.

(ஐ) 2013 நவம்பர் மாதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 5,913,550 பெறுமதியான வறுமை, அசாதாரண மற்றும் வலது குறைந்த நபர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக மூக்குக் கண்ணாடி, கேட்டல் உபகரணங்கள்,

ஊன்றுகோல், மற்றும் சக்கரநாட்காலிகள் என்பன கணக்காய்வு திகதியான 2014 பெப்ரவரி 07 ஆந் திகதி வரையிலும் சமூகசேவைகள் திணைக்களத்தினால் குறித்த ஆட்களுக்கு அனுப்பிவைக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தன.

**6.3 செயற்பாட்டு செயற்திறனின்மை**

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 3 மருந்து களஞ்சியங்களில் ரூபா 10,198,275 பெறுமதியான காலாவதியான 358 மருந்து உருப்படிகள் மற்றும் பெறுமதி இனங்கான முடியாத 15 வகை மருந்துகளும் தடுப்பூசி ஊசி வகைகளும் இருந்தன.

(ஆ) நாவலப்பிட்டிய வைத்தியசாலையின் எக்ஸ் கதிர் இயந்திரத்திற்காக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 151,200 பெறுமதியான Ledglass உபகரணங்கள் 2014 மார்ச் 18 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(இ) சுகாதார முறைமையை பலப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,159.443 பெறுமதியான 685 வகையான மருந்து வகைகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஈ) மாத்தளை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் மருத்துவ வழங்கல் பிரிவினல் 2013 வருடாந்த மதிப்பீட்டில் உள்ளக்கப்பட்டிருந்த ரூபா 2,504,363 பெறுமதியான 09 மருந்து வகைகள் மற்றும் ஈ.சீ.ஜீ. 9465 ரெகோடிங் பேபர் ரோல் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

(உ) 2013 ஆம் ஆண்டின் போது நுகவெல மத்திய மஹா வித்தியாலயம், நுகவெல ஆண்கள் பாடசாலை மற்றும் நுகவெல மகளிர் பாடசாலை என்பன ஒன்றிணைக்கப்பட்டு பலமான தேசிய பாடசாலையொன்றையும் கலவன் பாடசாலையொன்றையும் உருவாக்கும் நோக்கில் இடமாற்றம் வழங்கும் வரை நுகவெல மகளிர் வித்தியாலயத்தின் 78 ஆசிரியர்கள் நுகவெல மத்திய வித்தியாலயத்திற்கு இணைக்கப்பட்டிருந்தனர். அநத ஆசிரியர்களுக்காக 2013 சனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதிக்கு ரூபா 16,951,279 தொகை

சம்பளமாக மத்திய மாகாண சபை செலவினத் தலைப்பின் கீழ் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த ஆசிரியர்களுக்கு மத்திய அரசின் கீழ் நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மஹாவெலி அதிகாரசபைக்குரிய காணியொன்றை கையேற்காமல் ஹொத்மலே வலயக் கல்வி அலுவலகத்தினால் அங்கு 4000 சதுர அடி அளவிலான கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(எ) கட்டுகஸ்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் சேவைபுரிந்த 229 மாகாண சபை ஆசிரியர்களும், தேசிய பாடசாலையின் 28 ஆசிரியர்களும் பிரிவெனாக்களில் சேவை புரியும் 22 பேருமாக 279 ஆசிரியர்களுக்கு 2009 முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரித்தாக அவர்களுக்கு உரித்தான ரூபா 15,019,016 தொகையான நிலுவைச் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) மத்திய மாகாண சபையின் பிரதம செயலாளரின் 2004 யூலை 08 ஆந் திகதிய சீபிசீ/எம்ஈ/டீஈ/61சீடா/1 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ஹட்டன் வலயத்தின் பாடசாலையொன்றின் பிரதி அதிபர் ஒருவர் கடமைத் தேவைப்பாடு என்ற அடிப்படையில் குறிப்பிடப்பட்டு ஹட்டன் சீடா கல்வி அபிவிருத்தி நிலையத்தின் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் பதவிக்கு நீண்டகால ரீதியில் விடுவிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 3,584,140 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) 2013 இன் 3 வது காலாண்டின் குணநலன் உள்ளீட்டிற்காக ஹட்டன் கல்வி அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 5,650,500 தொகையில் ரூபா 1,613,985 தொகை அல்லது 28 சதவீதம் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,708,128 தொகை பயன்படுத்தப்படாமல் விளைவற்ற வகையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) ஹட்டன் வலயத்திற்குரிய பாடசாலை அமைந்துள்ள காணியின் சட்டரீதியான உரித்தைக் கல்வித் திணைக்களத்திற்கு கையேற்கும் நடவடிக்கை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 143 பாடசாலைக் காணிகள் மதிப்பிடப்பட்டு சட்டரீதியாக கையேற்பதற்கு அதற்குரிய தகவல்கள் மற்றும் கோவைகள் 2013 மார்ச் 22 ஆந் திகதி மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதி வரையில் அவற்றின் தொடர் நடவடிக்கைககள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மத்திய மாகாணத்தின் 08 வலயக் கல்வி அலுவலகங்களில் சேவை புரியும் 08 உத்தியோகத்தர்கர்கள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணியினரின் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அதில் 06 பேருக்கு கல்வித் திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 766,429 தொகை பாரளுமன்ற அலுவல்கள் அமைச்சிடமிருந்து மீள் நிரப்புவதற்கு 2014 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) உடதும்பர சித்தார்த்த ஆரம்ப பாடசாலை ஆரம்பிப்பதற்காக பிரோட்வே அபரல் நிறுவகத்திற்குச் சொந்தமான ஆதனங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2010 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்த ரூபா 20,000,000 தொகை உடதும்பர பிரதேச செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தெல்தெனிய வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2012 யூன் 26 ஆந் திகதி இக்காணியின் உரித்து கையேற்கப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குறித்த காணி கொள்வனவு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(க்) பிரதான அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் வள நிலைய முற்பணக் கணக்கிற்குரிய நிதி நிலைமைக் கூற்றில் முன்னைய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற மீதி ரூபா 1,969,736 ஆன மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது. அம்மீதியைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தாமதிக்கப்பட்டிருந்தது.

(க) முன்னைய ஆண்டுகளிலிருந்து பொது வைப்பு கணக்குகளில் தொடர்ந்தும் முன்கொண்டு வரப்படுகின்ற பின்வரும் மீதிகளை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | தொகை |
| --- | --- |
| | ரூபா |
| மாகாண திறைசேரி | (162,086,816) |
| பிரதேச பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் | 1,178,613 |
| மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் | (54,878,270) |

## 6.4 மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டினுள் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பராமரிக்கப்பட வேண்டுமென இனங்காணப்பட்ட 1,197 கிலோ மீற்றர் வீதிகளில் நேர் உழைப்பு முறைமை அடிப்படையில் 39 கிலோ மீற்றர் வீதிகளே பராமரிக்கப்பட்டிருந்தன. அது எதிர்பார்க்கப்பட்ட கிலோ மீற்றர்களில் 3.25 சதவீதமாக இருந்தது.

(ஆ) அதிகாரசபை உருவாக்கல் நிதியதிச் சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபையால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வீதிகள் மாத்திரம் பராமரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் அதிகாரசபைக்கு உரித்தல்லாத பிரதேச சபைக்குச் சொந்தமான 09 வீதிகளைப் பராமரிப்பதற்காக ரூபா 34,115,083 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் ரூபா 11,010,745 தொகையான செலவில் ரிபேர்டன் முருத்தென்ன ஹங்கராப்பிட்டிய வீதியின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒப்பந்தக்காலம் பூர்த்தியடைந்து 02 மாதங்களின் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் குறித்த காலப்பகுதியில் ஒப்பந்தத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதுமான முயற்சியொன்று மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களுக்கு நியமிக்கப்பட்டிருந்த சில உத்தியோகத்தர்கள் அந்த மதிப்பீட்டுக் கூட்டங்களுக்கு சமூகமளிக்காதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டதன் காரணமாக 10 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 85,072,917 பெறுமதியான நிர்மாணங்களின் மதிப்பீட்டு குழு அறிக்கையுடன் இணங்குவதற்கு கணக்காய்விற்கு முடியாதிருந்தது.

(உ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்மாணிக்கப்பட்ட கொஸ்வான கன்சரனபொல வீதியில் எஸ்போல்ட் பரப்பி பதப்படுத்தப்பட்டதன் பின்னர் தடிப்பு 40 மி.மீ ஆக இருக்க வேண்டிய போதிலும், பரீட்சிக்கப்பட்ட 09 இடங்களிலும் 18 மி.மீ. இற்கும் 25 மி.மீ இடையில் இருந்தமையால் வீதி நிர்ணயிக்கப்பட்ட தடிப்பில் பூர்த்தி செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) 3230 கன மீற்றர் எஸ்போல்ட் இடப்பட வேண்டிய வீதியின் மேற்பரப்பிற்கு 2780 கன மீற்றர் இடப்பட்டமையால் ரூபா 631,588 பெறுமதியான 450 கன மீற்றர் எஸ்போல்ட் இடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களின் கீழ் கல்வி அபிவிருத்திக்காக 2013 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த மதிப்பீட்டின் மூலம் திரட்டிய நிதியத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 128,000,000 தொகையில் அதன் நோக்கத்திற்கு உரித்தல்லாத செயற்பாடுகளுக்காக 58 சந்தர்ப்பங்களில் ரூபா 4,489,930 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) விவசாய அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நீர்ப்பாசன கைத்தொழில்களுக்குரிய 2014 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட விபரங்கள் பின்வருமாறு

i. ரூபா 542,050 ஆன செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட வலப்பனே வட்டரக்கொட கால்வாயின் பழைய நிர்மாணங்களில் தொடர்ந்தும் நீர் கசிந்து விரயமாகிக் கொண்டிருந்தது.

ii. கொத்மலே கும்பல்ஓய அணைக்கட்டிலிருந்து ரேனிட்தெனிய வயல் காணிகளுக்கு நீரைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 401,201 தொகை செலவு செய்து 245 அடி அளவிலான நீர் கால்வாயொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் மூலம் வயல் காணியின் ஓரங்களில் அமைந்துள்ள வயல்களுக்கு நீர் கிடைக்காதிருந்தமை களப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

iii. 24 ஏக்கருக்கு நீர் வழங்குவதை நோக்காகக் கொண்டு ரூபா 612,466 தொகை செலவில் கும்பல்ஒலுவ கால்வாய் மேம்படுத்தப்பட்டிருந்த போதிலும், போதியளவிலான நீர் கால்வாய்க்கு கிடைக்காத காரணத்தினால் 2013/14 பெரும்போகத்தில் வயல் காணிகளில் பயிர்செய்கை செய்யப்படாமல் இருந்தன.

iv. 2013 இல் மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களின் கீழ் ரூபா 1,779,502 செலவில் 03 நீர்ப்பாசன வேலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அக்கால்வாய்களிலிருந்து நீரைப் பெற்றுக்கொள்ளும் 79 ஏக்கர் வயல்களில் 2013/14 பெரும்போகத்தில் பயிர்செய்கை மேற்கொள்ளப்படாமல் இருந்தன.

(இ) மத்திய மாகாண சபையின் நிர்வாகக் கட்டிடத் தொகுதிக்கு 02 மின்பிறப்பாக்கி இயந்திரங்களை வழங்கி பொருத்துவதற்காக 2012 ஆம் ஆண்டின் நிதிஏற்பாடுககளிலிருந்து ரூபா 31,297,567 தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைத்து 2013 சனவரி 28 ஆந் திகதி இலங்கை மின்சார சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குறித்த இரண்டு மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் வழங்கி பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முத்திரை வரி வருமானமாக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 685,302,150 தொகையும் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 862,749,671 தொகையும் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், ஊக்குவிப்பு படிகள் கொடுப்பனவிற்காக 1990 இன் 17 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் அல்லது 1992 இன் 01 ஆம் இலக்க திருத்திய நியதிச்சட்டம் அல்லது ஊக்குவிப்பு படிகள் கணிப்பீட்டிற்காக முத்திரை வருமானத்தை அடிப்படையாகக் கொள்வதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மாகாண இறைவரி திணைக்களத்தினால் 2012 முதல் அரையாண்டின் மதிப்பீட்டு அறிவித்தல் பேரில் அறவிடப்பட்ட ரூபா 34,050,469 ஆன வரித்தொகை மற்றும் ரூபா 421,165,921 ஆன முத்திரைக் கட்டண வருமானம் என்பன இரண்டாவது அரையாண்டில் ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது.

(உ) சேவை வசதிகள் குறைந்த பிரதேசங்களில் பிரசவ மற்றும் சிறுவர் சுகாதாரத்துடன் அண்மித்த நோய்கள் காரணமாக ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையைக் குறைத்தல், தடுப்பூசிகள் மற்றும் மீள்சுழற்சி, சகாதார முறைமைகளை வலுப்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கமாக இருந்த போதிலும், இந்நோக்கத்திற்கு புறம்பாக 03 சந்தர்ப்பங்களில் நிர்மாணங்கள் மற்றும் கொள்வனவிற்காக ரூபா 2,880,141 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) பின்வரும் சந்தர்ப்பங்களில் கல்வித் திணைக்களம் தனது நோக்கங்களுக்குரிய செயற்பாடுகளிலிருந்து விலகி செயற்பட்டிருந்தன.

i. வத்தேகம வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் உள்ள 14 பாடசாலைகளுக்காக 2013 யூன் மாதத்திற்குரிய ரூபா 744,473 தொகையையும் யூலை மாதத்தில் 71 பாடசாலைகளுக்காக ரூபா 2,535,646 தொகையையும் உணவு வழங்குனர்களுக்கு கொடுப்பனவு

செய்யாததன் காரணமாக அவர்கள் உணவு வழங்களிலிருந்து விலகியிருந்தனர்.

ii. பத்தேகம கனிஷ்ட வித்தியாலயத்தின் 15 மாணவர்களுக்காக 151 ஆசிரியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அதில் இரண்டு பேர் வேறு பாடசாலையொன்றுக்கு இணைக்கப்பட்டிருந்தனர். எஞ்சிய ஆசிரியர்களுக்கு இடையே ஒரு பாடசாலை நாளில் ஆசிரியர்கள் 04 முதல் 12 வரையான அளவில் விடுமுறை பெற்றுக்கொண்டுள்ளமையால் பாடசாலையின் கல்வி நடவடிக்கைககள் பாதிப்படைந்து காணப்பட்டது

(எ) 1994 யூலை 01 ஆந் திகதி 24/94 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2001 சனவரி 15 ஆந் திகதிய 01/2001 ஆம் ஓய்வூதிய சுற்றறிக்கை என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க மாகாண சபையினால் விதவை அநாதை ஓய்வூதியப் பங்களிப்பு தொகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

i. 2013 திசெம்பர் 26 ஆந் திகதிய எஸ்ஏ/ஜீஈஎஸ்//27 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்குரிய தீர்வு செய்யப்படாத விதவை அநாதை ஓய்வூதியப் பங்களிப்பு தொகையுடன் சகல நிலுவைத் தொகைகளை 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அல்லது அதற்கு முன்னர் ஓய்வூதித் திணைக்களத்திற்கு தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்ப்பதற்கு தொடர்ந்தும் எஞ்சியிருந்த பங்களிப்புத் தொகைகளின் கூட்டுத்தொகை ரூபா 1,859,547,432 ஆக இருந்தது.

ii. மேற்குறித்த பந்தியில் காணப்படும் நிலுவை தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத போதிலும், மாகாண சபையால் 2 அரச வங்கிகளில் நிலையான வைப்புக்களில் முதலீடு மற்றும் அதன் மூலம் உழைத்த வட்டி தொகைகளின் கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 940,220,286 ஆக இருந்தன.

(எ) விவசாய அமைச்சின் உத்தியோகத்தரொருவருக்கு 2011 சனவரி முதல் 2013 செப்தெம்பர் வரையான காலப்பகுதியில் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு வழங்கப்பட்டிருந்த மேலதிக எரிபொருள் (பெற்றோல்) 6,900 லீற்றரில் ரூபா 592,659 பெறுமதியான 4,131 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்ட விதத்தை உறுதிப்படுத்துவதற்குரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. வாகனத்தின் ஓட்டம் தொடர்பான நாளாந்த பதிவுகளும் முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மத்திய மாகாண நிதி விதி 164(அ) பந்தியின் ஏற்பாடுகளுடன் இணங்காமல் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் 14 சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 6,363,616 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) விவசாய அமைச்சினால் மும்மாத கொவி சவிய சஞ்சிகையின் விசேட இதழை 03 மாதத்தில் அச்சிடும் போது கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9 பந்தியின் பிரகாரம் முறையான உடன்படிக்கையொன்றை மேற்கொள்ளாத காரணத்தினால் இணங்காணப்பட்டிருந்த ரூபா 712,500 ஆன விலையை மிகைத்து மேலும் ரூபா 274,200 தொகை கொடுப்பனவு செய்ய நேர்ந்திருந்தது.

## 6.6 வெளிப்படையான மோசடிகள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1000 இரண்டாம் தர பாடசாலைகள் மற்றும் 5000 ஆரம்ப தர பாடசாலைகள் என்பவற்றை மீள் நிர்மாணிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைத்த ரூபா 400,000 தொகையில் ரூபா 174,395 தொகையை முறையற்ற விதத்தில் லஷ்சபான மத்திய மஹா வித்தியலாயத்தின் அதிபரால் லஷ்சபான கிராமிய வங்கியில் பேணப்பட்டு வந்த அவரின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் செலவு வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மலசலகூட தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக அம்பகமுவ பிரதேச செயலகத்தினால் 2012 ஆம் ஆண்டின் போது லஷ்சபான மத்திய மஹா வித்தியலாயத்திற்கு ரூபா 366,231 தொகை வழங்கப்பட்டிருந்தது. இத்தொகையில் ரூபா 330,231 தொகை மற்றும் ரூபா 30,000 தொகையுமாக ரூபா 360,331 கூட்டுத்தொகையான 2 காசோலைகள் எழுதி முன்னாள் அதிபரால் முதலாவது கையொப்பமும் பிரதி அதிபரால் இரண்டாவது கையொப்பமும் இடப்பட்டு மக்கள் வங்கியின் கினிகத்ஹேன கிளையில் பேணப்பட்டுவரும் முன்னாள் அதிபரின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

**6.7 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படாத பௌதீக வளங்கள்**

கல்வி, சுகாதார மற்றும் கௌரவ ஆளுனர் அவர்களின் அலுவலகங்களுக்குரிய 811 காணி, கட்டிடங்கள், வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன 1 ஆண்டு முதல் 15 ஆண்டுககள் வரையான காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றன.

**6.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மத்திய மாகாண சபையின் கௌரவ தலைவர் மற்றும் உப தலைவர் ஆகியோருக்கு 2013 ஒக்தோபர் 09 ஆந் திகதி முதல் 2014 ஜனவரி 09 வரையான உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குவதற்காக முறையே ரூபா 153,240 தொகையும் ரூபா 92,129 ஆன செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவர்கள் அவ்வீடுகளில் குடியிருப்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) மாகாண சபை கூட்டத்தொடர்களில் பயன்படுத்தப்படுகின்ற செங்கோல் நல்ல நிலைமையில் காணப்படும் போது 2013 மே 31 ஆந் திகதி ரூபா 580,000 செலவில் புதிய செங்கோலொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

(இ) கொழும்பு மருத்துவ வழங்கல் பிரிவின் மூலம் 2013 ஆம் ஆண்டின் போது மாத்தளை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட மருந்து இருப்புக்களில் ரூபா 1,322,973 பெறுமதியான மருந்துகள் தரமற்றதென தீர்மானிக்கப்பட்டமையால் மாத்தளை பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக பிரதேச அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்பட்ட மேலும் 07 வகை 17 நாட்கள் முதல் 23 நாட்கள் வரையான காலம் கடந்ததன் பின்னர் தரமற்றவை எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தன. அச்சந்தர்ப்பம் வரையிலும் அம்மருந்துகள் வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மத்திய மாகாணத்திற்காக ஒட்டுமொத்த சுற்றுலா திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு ரூபா 2,300,000 செலுத்தி தேவையான திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அச்சுற்றுலாத் திட்டம் 2013 ஆம் ஆண்டின் போதும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6.9 இனங்காணப்பட்ட நட்டங்கள்

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது 02 வாகன விபத்துக்களின் திருத்தங்களுக்காக ரூபா 334,433 தொகை செலவாகியிருந்த போதிலும், காப்புறுதி உரித்து மூலம் ரூபா 232,123 தொகை மாத்திரம் மேவுகை செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 102,310 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. நட்டம் தொடர்பாக நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சகாதாரத் திணைக்களத்தில் ஏற்பட்டிருந்த நட்டங்கள் சேதங்களில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் அறவிடப்பட வேண்டிய அல்லது பதிவழிப்பதற்கு ரூபா 1,915,518 ஆன நட்ட மீதியொன்று காணப்பட்டதுடன், அம்மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 1,832,157 ஆன மீதிகள் 2004 ஆம் ஆண்டிற்கு முன் இருந்து காணப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

(இ) உற்பத்தி செயற்பாட்டிற்காக புடவைக் கைத்தொழில் நிலையங்களுக்கு வழங்கப்படும் நூல், சாயம், துணி மற்றும் இரசாயன பொருட்கள் என்பவற்றை மோசடி செய்தமை மற்றும் களவு போனமை காரணமாக ரூபா 1,442,665 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. அந்நட்டம் ஏற்பட்டு 08 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், நிதி விதி 54 இன் பிரகாரம் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மத்திய மாகாண சபைக்குரிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் வாகன விபத்துக்கள் தொடர்பாக 03 சந்தர்ப்பங்களுக்குரிய தீர்வு செய்யப்படாது காணப்படும் ரூபா 304,862 தொகையான இழப்புக்கள் மற்றும் 11 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 31,834,853 தொகையான சேதங்கள் உட்பட மொத்த சேதங்களின் கூட்டுத்தொகை ரூபா 32,139,715 ஆக இருந்தன. மேலும் 04 சந்தர்ப்பங்களுக்குரிய ஆதனங்களுக்காக சேதங்களின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. வருடக் கணக்காக இருக்கும் இந்த வாகன மற்றும் ஆதனச் சேதங்கள் என்பவற்றை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6.10 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

-------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) திசைட் தமிழ் வித்தியாலயத்தின் திருத்த வேலைகள் - ரூபா 654,617**

-----------------------------------------------------------------------------------------------------------------------

40 அடி நீளம் மற்றும் 20 அகலமான கட்டிடம்

-----------------------------------------------------------------------

i. 172.65 சதுர மீற்றர் அளவிலான வகுப்பறைகளில் பூச்சு பூசுவதற்காக ரூபா 22,444 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், உரிய தரத்திலான பூச்சு பூசப்பட்டிருக்கவில்லை.

ii. 03 கதவுகளைப் பொருத்துவதற்காக 8.81 சதுர மீற்றர்களுக்காக ரூபா 38,764 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், சகல கதவுகளினதும் தாழ்பால்களும் உடைந்திருந்தது.

40 அடி நீளம் மற்றும் 20 அகலமான கட்டிடம்

-------------------------------------------------------------------------

138.30 சதுர மீற்றருக்கு  பூச்சு பூசுவதற்காக ரூபா 17,979 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், முறைப்படி பூச்சு பூசப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இன்வெரி தமிழ் வித்தியாலயம் - ரூபா 547,268**

--------------------------------------------------------------------------------

i. நிர்ணயிக்கப்பட்ட தடிப்பினை விட குறைந்த தடிப்பிலான 03 இரும்புக் கதவுகளைப் பொருத்துவதற்காக 5.83 சதுர மீற்றருக்காக ரூபா 55,385 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

ii. மதிப்பீட்டு எல்லையை மிகைத்து நிலத்திற்கு கொங்கிரீட் இடுவதற்காக 35 சதுர மீற்றருக்காக ரூபா 37,800 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(இ) ஹெட்லி தமிழ் வித்தியாலய நிர்மாணம் - ரூபா 547,268**

----------------------------------------------------------------------------------------------------

நிர்ணயிக்கப்பட்ட தடிப்பினை விட குறைந்த தடிப்பிலான 02 இரும்புக் கதவுகளைப் பொருத்துவதற்காக 4.4 சதுர மீற்றருக்காக ரூபா 39,330 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) வெலிஓய தமிழ் வித்தியாலயம் - ரூபா 537,369**

---

i. நிலத்திற்கு கொங்கிரீட் இடுவதற்காக 156.44 சதுர மீற்றருக்காக ரூபா 89,170 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், நிர்ணயிக்கப்பட்ட கலவையில் இல்லாமல் சீமெந்து இட்டமையால் 69.6 சதுர மீற்றர் அளவில் பழுதடைந்திருந்தது.

ii. சிலைடிங் (Sliding window) யன்னல் ஒன்றைப் பொருத்துவதற்காக 12.96 சதுர மீற்றருக்காக ரூபா 106,931 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதன் பாதுகாப்பிற்காக உள்ளே இரும்பு வலை பொருத்தப்பட்டிருக்கவில்லை.

iii. கட்டிடத்திற்கு நுழையும் படிக்கற்களுக்கு கொங்கிரீட் இடுவதற்காக 4.9 கியுப்களிற்காக ரூபா 51,131 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக 2.32 கொங்கிரீட் கியுப்கள் மாத்திரமே இடப்பட்டிருந்தமையால் 2.58 கொங்கிரீட் கியுப்களுக்காக ரூபா 24,209 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(உ) நாமகள் தமிழ் வித்தியாலயத்தின் 90 அடி நீளம் மற்றும் 25 அகலமான கட்டிடத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணம்**

---

i. மின் முறைமைக்காக பொருத்தப்பட்டிருந்த செயற்படாத ஆழியொன்றுக்கு ரூபா 54,145 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

ii. 1:3 கலவையில் சீமெந்து இடுவதற்காக 201.74 சதுர மீற்றருக்காக ரூபா 97,843 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதில் நிர்ணயிக்கப்பட்ட கலவையில் இல்லாமல் சீமெந்து இட்டமையால் 77.2 சதுர மீற்றர் அளவில் முழுமையாக பழுதடைந்திருந்தது.

**(ஊ) பேராதனை தமிழ் வித்தியாலயத்தின் திருத்த வேலைகள் - ரூபா 547,268**

---

ஆசிரியர் விடுதியின் வடிகாண் 1:2:5:5 கலவையில் கொங்கிரீட் இடுவதற்காக 1.13 இற்காக ரூபா 15,209 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக 0.232 கனமீற்றர் மாத்திரம் இடப்பட்டிருந்தமையால் 12.081 கன மீற்றருக்காக ரூபா 12,081 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தத.

## 6.11 தாமதமான செயற்திட்டங்கள்

-------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொத்மலே கொஹொல்தெனிய பூட்வெல்ல கால்வாய் திருத்த வேலைக்காக 2013 யூலை 03 ஆந் திகதி நீர்ப்பாசனப் பொறியியலாளரால் விவசாய அமைப்பொன்றுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாணம் 2013 நவம்பர் 05 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன், 2014 மார்ச் 31 இல் உள்ளவாறு வேலைகளின் 26 சதவீதமான அளவு மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) டன்சினன் பூண்டுலோயா வீதி

-----------------------------------------------

i. 2013 பெப்ரவரி 17 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த ரூபா 4,485,940 கிரயத்திலான இந்நிர்மாணம் 07 மாத தாமதத்துடன், பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

ii. முதலாவது தார் ஊற்றியதன் பின்னர் 28 நாட்களுக்குள் இரண்டாவது தடவை தார் ஊற்றப்பட வேண்டிய போதிலும், அது 03 மாதங்கள் கடக்கும் வரை மேற்கொள்ளாமை காரணமாக வீதியின் மேற்பரப்பு அதிகளவில் பழுதடைந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் மஹஓய தேவஹந்திய பாலத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலத்தை மிகைத்து 06 மாதங்களுக்கு அதிகமான காலம் எடுக்கப்பட்டிருந்த போதிலும், நிர்மாண வேலைகளின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதிகாரசபையின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படாத இவ்வீதி ஊடாக காணப்படும் நீர் வீழ்ச்சியுடன் கூடிய கால்வாய் வழிக்காக பாலமொன்றை நிர்மாணித்தல் அதிகாரசபைக்கு உரித்தான செயற்பாடாக இல்லாதிருந்திருந்த போதிலும், அதற்காக ரூபா 12,157,885 செலவினமொன்று அதிகாரசபையினால் செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 3,003,001 மதிப்பீட்டுக் கிரயமான நோட்டன்ஹோமாகம வீதி நிர்மாணத்தின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்தல் 10 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் தாமதமடைந்திருந்தது. இந் நிர்மாணத்தின் முதலாவது தார் ஊற்றப்பட்டு 07 மாதங்கள் கடந்திருந்த போதிலும், இரண்டாவது தடவை தார்

ஊற்றப்படாமை காரணமாக வீதியின் மேற்பரப்பு முழுமையாக பழுதடைந்திருந்தது.

## 6.12 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்திய மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தன. (ஆசிரியர் மற்றும் அதிபர் சேவை தவிர)

| | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை** | **உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **மிகைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 2,036 | 1,610 | 426 | - |
| மூன்றாம் நிலை | 913 | 726 | 187 | - |
| இரண்டாம் நிலை | 8,676 | 6,200 | 2,476 | - |
| ஆரம்ப நிலை | 4,678 | 3,358 | 1,320 | - |
| ஏனைய (அமைய, தற்காலிக) | 23 | 701 | - | 678 |
| மொத்தம் | 16,326 | 12,595 | 4,409 | 678 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

i. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை மிகைத்து ஏனைய ஊழியர்கள் 678 பேர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், 4,409 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 76 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iii. புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்த 96 மிகையான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான முறையான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்வதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

iv. கைத்தொழில் திணைக்களத்தின் 47 மதியுரையாளர் பதவிகளில் 15 பதவிகளும் நிறுவனத்தின் நிர்வாகப் பதவியும் வெற்றிடமாக காணப்பட்டமையால் அது நிறுவகத்தின் பதவியணியினர் தொடர்பில் நேரடியாக தாக்கமளித்திருந்தது

**(ஆ) பாடசாலை பதவியணியினர்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிபர் சேவையினதும் ஆசிரியர் சேவையினதும் பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தன.

| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அதிபர்கள் | 1,717 | 1,570 | 147 | - |
| ஆசிரியர்கள் | 25,084 | 26,941 | - | 1,857 |
| சிற்றூழியர்கள் | 2,046 | 607 | 1,439 | - |
| ஏனையவை | 249 | 28 | 221 | - |
| மொத்தம் | 29,096 | 29,146 | 1,807 | 1,857 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அதிபர் தரத்தில் 147 வெற்றிடங்கள் இருக்கையில் தற்போது உள்ள அதிபர் தரத்திலுள்ளோர் அதிபர் கடமைகளிலிருந்து விலக கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ii) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலவிய சிற்றூழியர்கள் மற்றும் ஏனைய சேவைகளில் உள்ள 1807 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஆட்சேர்க்கப்பட்டிருந்த 1857 ஆசிரியர் தொடர்பாக முறையான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 15 வலயக் கல்வி அலுவலகங்களுக்குரிய 1499 பாடசாலைகளில் வலயக் கல்வி அலுவலக மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் உள்ளவாறான எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 09 வலயக் கல்வி அலுவலகங்களில் 1312 ஆன வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், 06 வலயக் கல்வி அலுவலகங்களில் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து 3,169 ஆசிரியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

- 09 வலயக் கல்வி அலுவலகங்களல் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் 03 மடங்கிற்கு அண்மித்த ஆசிரியர் மிகையொன்றும் எஞ்சிய 06 வலய அலுவலகங்ககளில் காணப்படுகின்றன. மாகாணத்தினுள் 15 வலயக் கல்வி அலுவலகங்களில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் மற்றும் ஆசிரியர் மிகை ஒன்றுக்கொன்று இணக்கம் செய்யப்பட்டு தீர்வு செய்யப்பட முடியுமாக இருந்த போதிலும், அது தொடர்பில் கவனம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

**(இ) விளைவற்ற மனித வளங்கள்**

--------------------------------------------------

(i) கடுகஸ்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய 19 மாணவர்கள் கல்வி பயிலும் நியங்கொடை கனிஷ்ட வித்தியாலயத்திற்காக 8 ஆசிரியர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். 1 ஆம் மற்றும் 2 ஆம் தரங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 22 மாணவர்கள் கல்வி பயிலும் ஹரங்கஹவ கனிஷ்ட வித்தியாலயத்திற்கு 15 ஆசிரியர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். அப்பாடசாலையில் 1, 2, 4 மற்றும் 5 தரங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தின் 04 ஆசிரியர்களிடமிருந்து எதுவித சேவையொன்றையும் பெற்றுக்கொள்ளாமல் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டு வந்தன.

(ஈ) ஏனையவை

வத்தேகம கல்வி வலயத்தில் அமைந்துள்ள அபிராமி தமிழ் வித்தியாலயத்தின் அதிபரால் 2010 ஆம் ஆண்டின் போது 117 நாட்கள், 2011 ஆம் ஆண்டின் போது 76 நாட்கள் மற்றும் 2012 ஆம் ஆண்டின் போது 101 நாட்கள் விடுமுறை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. வலயக் கல்விப் பணிப்பாளரினால் இது தொடர்பாக அறிக்கையிடப்பட்டிருந்தன. இது தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காமல் 2013 யூன் 03 ஆந் திகதி முதல் தொழில்நுட்ப பாடத்திற்கான ஒருங்கிணைப்பு உத்தியோகத்தராக மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ் பிரிவிற்கு இணைக்கப்பட்டிருந்தார்.

## 7 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 7.1 கூட்டிணைந்த திட்டம்

சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் தொடர்பான திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த தந்திரோபாயத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் நடைமுறைப்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிர்மாணங்களுக்காக உரிய இடங்களை இனங்காணுதல், காணிகளை ஒதுக்குதல் போன்ற ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 7.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 1.4.1 பந்தியின் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 03 திணைக்களங்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபை என்பன மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 7.3 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அமைச்சொன்றிலும் 11 திணைக்களங்களிலும் உள்ளக் கணக்காய்வுப் பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கைத்தொழில் அமைச்சு மற்றும் 02 திணைக்களங்களினால் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

## 7.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

---------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 06 திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றினால் 2013 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காலாண்டு அடிப்படையில் ஆண்டொன்றிற்காக ஆகக் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக மாகாண விவசாய அமைச்சினால் 03 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 7.5 கொள்வனவுத் திட்டம்

--------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 02 நிறுவனங்களால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீளாய்வாண்டிற்கான வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மத்திய மாகாண பிரதம செயலாளரினால் 2013 ஆம் ஆண்டிற்காக பதிவு செய்யப்பட்டிருந்த வழங்குனரிடமிருந்து அல்லாமல் நுவரெலியா வலயக் கல்வி அலுவலகத்தினால் ரூபா 344,250 பெறுமதியான 5 கணனிகளும் 03 அச்சிடும் கருவிகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், ஆகக் குறைந்த விலை நிராகரிக்கப்பட்டு குறித்த கொள்வனவினால் கூடுதலாக ரூபா 26,250 தொகை செலுத்த நேர்ந்தது.

### 7.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2 அமைச்சுக்களினாலும் மற்றும் ஒரு திணைக்களத்தினாலும் குறித்த செலவின விடயங்களின் கீழ் கணக்கீடு செய்யாமல் ரூபா 1,004,290 கூட்டுத்தொகையான செலவினங்களை ஏனைய 09 செலவின விடயங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) புடவைக் கைத்தொழில் திணைக்களம் மாகாண நிதி விதி 30.1 இன் நியதிகளுக்கு இணங்காமல் எதிர்பார்க்கப்பட்ட நிதிஏற்பாட்டில் செலவின விடயமொன்றில் ரூபா 640,434 செலவினம் மேற்கொண்டிருந்தது.

(இ) மின்சக்தி அமைச்சினால் மீண்டுவரும் நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி ரூபா 209,124 தொகையான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 7.7 ஆண்டறிக்கை சபையில் சமர்ப்பித்தல்

1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடந்த ஆண்டுகளின் மத்திய மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மாகாண சபையில் சமர்ப்பித்தல் நிலைமை பின்வருமாறு

| ஆண்டு | அறிக்கை திகதி | சபையில் முன்வைத்த திகதி |
|---|---|---|
| 2009 | 2010.08.17 | 2010.09.07 |
| 2010 | 2011.12.30 | 2012.02.06 |
| 2011 | 2013.03.28 | 2013.04.23 |
| 2012 | 2014.07.04 | 2014.08.19 |

## 8. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பபடுகின்றன.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) உள்ளகக் கணக்காய்வு
(ஈ) மாகாண சபை அபிவிருத்தி திட்டம்
(உ) பதவியணியினர் முகாமைத்துவம்

பின்னிணைப்பு 01

வருமானம் (ரூபா மில்லியனில்)

| மாகாண சபை விடயங்களுக்குரிய வருமானம் | 2013 | | | 2012 | | | 2011 | | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் |
| | ரூபா. மி | ரூபா.மி | ரூபா. மி | ரூபா.மி | ரூபா.மி | ரூபா. மி | ரூபா. மி | ரூபா.மி | ரூபா. மி | ரூபா. மி | ரூபா.மி | ரூபா. மி | ரூபா. மி | ரூபா.மி | ரூபா. மி |
| வரி வருமானம் | 4,790 | 3,840 | 950 | 4,612 | 3,853 | 759 | 3,325 | 3,685 | (360) | 3,032 | 2,669 | 363 | 3,076 | 2,337 | 739 |
| வரியல்லாத வருமானம் | 471 | 701 | (230) | 428 | 1,002 | (574) | 325 | 941 | (616) | 348 | 323 | 25 | 458 | 370 | 88 |
| | 5,261 | 4,541 | 720 | 5,040 | 4,855 | 185 | 3,650 | 4,626 | (976) | 3,380 | 2,992 | 388 | 3,534 | 2,707 | 827 |
| அரசாங்க மானியம் | 19,832 | 18,522 | 1,310 | 17,311 | 15,532 | 1,779 | 17,948 | 16,029 | 1,919 | 16,087 | 15,775 | 312 | 15,332 | 15,775 | (443) |
| | 25,093 | 23,063 | 2,030 | 22,351 | 20,387 | 1,964 | 21,598 | 20,655 | 943 | 19,467 | 18,767 | 700 | 18,866 | 18,487 | 384 |

செலவினம் (ரூபா.மில்லியனில்)

| | 2013 | | | 2012 | | | 2011 | | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் |
| மீண்டெழும் செலவினம் | ரூபா. மி | ரூபா.மி | ரூபா. மி | ரூபா. மி | ரூபா.மி | ரூபா. மி | ரூபா. மி | ரூபா.மி | ரூபா. மி | ரூபா. மி | ரூபா.மி | ரூபா. மி | ரூபா. மி | ரூபா.மி | ரூபா. மி |
| ஆளணி வேதனம் | 416,693 | 16,020 | 691 | 15,157 | 14,752 | 405 | 14,156 | 14,128 | 28 | 12,962 | 12,837 | 125 | 12,271 | 11,967 | 304 |
| ஏனைய | 4,251 | 4,008 | 243 | 3,982 | 3,248 | 734 | 2,871 | 2,799 | 72 | 3,298 | 3,008 | 290 | 3,513 | 2,819 | 694 |
| உப மொத்தம் | 20,944 | 20,010 | 934 | 19,139 | 18,000 | 1,139 | 17,027 | 16,927 | 100 | 16,260 | 15,845 | 415 | 15,784 | 14,786 | 998 |
| மூலதனச் செலவினம் | 4,490 | 3,282 | 1,208 | 3,764 | 3,162 | 602 | 4,571 | 2,614 | 1,957 | 3,618 | 2,841 | 777 | 4,565 | 3,896 | 669 |
| மொத்தம் | 25,434 | 23,292 | 2,142 | 22,903 | 21,162 | 1,741 | 21,598 | 19,541 | 2,057 | 19,878 | 18,686 | 1,192 | 20,349 | 18,682 | 1,667 |